

இராயபுரம் சட்டமன்றத் தொகுதி 52–வது வார்டு மார்டன் லைன் பகுதியில், கடந்த 70 ஆண்டுகளாக மாநகராட்சிக்கு சொந்தமான பகுதியில் வசித்துவந்த மக்களுக்கு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவை, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி. சேகர்,நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, வீட்டுமனை பட்டாக்களை வழங்கி துவக்கி வைத்தனர். இதில் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி முன்னிலை வகித்து, 236 வீட்டுமனை பட்டாக்களை பொதுமக்களுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்! ரூ.800 கோடியில் 'குறளகத்துடன்' இணைந்த

# பல்நோக்கு போக்குவரத்து வசதி வளாகம் பெருந்திட்ட தொடக்க விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜன.5-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின்படி, கொளத்தூர், துறைமுகம், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

"ரூ.800 கோடி செலவில் கட்டப்படவுள்ள" குறளகத்துடன் இணைந்த பல்நோக்கு போக்குவரத்து வசதி வளாகம்" பெருந்திட்டத்திற்கான துவக்க விழா, முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால், இம்மாதம் 25ஆம் தேதிக்குள் நடைபெறும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின்படி, நேற்று (04.01.2026) கொளத்தூர், துறைமுகம், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், சென்னை தீவுத்திடலில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தின் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து



முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரரை அறிவுறுத்தி, ஆலோசனைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

75 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிராட்வே பேருந்து நிலையம் திராவிட மாடல் ஆட்சியில் வடசென்னையின் துவக்க இடமான பிராட்வே பேருந்து நிலையத்தை மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். பின்னர் பல்வேறு இடர்பாடுகளை கடந்து, இந்த மாதத்திற்குள் பிராட்வே பேருந்து நிலையப் பணிகள் தொடங்க இருக்கின்றன. குறளகத்துடன் இணைந்த பல்நோக்கு போக்குவரத்து வசதியுடன் வளாகத்தில் சுமார் 73 பேருந்துகள் நிறுத்துவதற்கான பேருந்து தளவாடங்கள் (Bus Bays) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு மணி நேரத்திற்கு சுமார் 466 முறை பேருந்துகள் வந்து செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிராட்வே புதிய பேருந்து நிலையம் செயல்படத் தொடங்கும் போது, வடசென்னையின் மக்களே அதன் பிரதான பயனாளிகளாக இருப்பார்கள். குறிப்பாக, காலையில் பணிக்குச் செல்லும் தொழிலாளர்கள், கோயம்பேடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் அதிகமாக இங்கிருந்துதான் பயணம் செய்கின்றனர். இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அந்த பயனாளிகள் பயணிக்க தேவையான அனைத்து வசதிகளையும் நிறைவேற்றித் தர உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில், நாம் தற்போது நின்று கொண்டு பேசுகின்ற இராயபுரம் தற்காலிக பேருந்து நிறுத்த இடத்தில் 55 பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுமார் 4 ஏக்கர் பரப்பளவில், ரூ.7.47 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சுமார் 2,000 பேருந்துகள் வந்து செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதால், தினமும் சுமார் 40,000 மக்கள் இங்கிருந்து பயணம் செய்வார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

பயணிகளின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, சிறிய உணவகங்கள், ஆவின் பால் அங்காடிகள், சீரான போக்குவரத்து ஏற்பாடுகள், மேலும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறிய காவல் நிலையம் அமைப்பது போன்ற அனைத்து அம்சங்களையும் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம். இந்தப் பணிகள் தொடங்கிய நாள் முதல், நானும், சென்னை மாநகர மேயர் திருமதி பிரியா அவர்களும், மக்களின் தேவைகளை ஒவ்வொன்றாக கணக்கிட்டு, வளர்ச்சிக்கு துணை நிற்கும் சென்னை பெருநகர மாநகராட்சியின் ஆணையாளர் அன்பிற்குரிய திரு.குமரகுருபரன் அவர்களும் இணைந்து தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம்.

முதற்கட்ட ஆய்வில் இந்த இராயபுரம் தற்காலிகப் பேருந்து நிலையம் தற்காலிகமானதாக போதுமானதாக இருக்கும் என கருதினோம். ஆனால், தொடர்ச்சியான ஆய்வுகளின் அடிப்படையில், இங்கு வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. இதன் காரணமாக, கூடுதலாக ஒரு துணை தற்காலிக பேருந்து நிலையமாக தீவுத்திடல் பகுதியில், சென்னை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள நீர்வளத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து சில இடங்களைப் பெற்று, அங்கும் மேம்பாட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், தீவுத்திடல் தற்காலிகப் பேருந்து நிலையம் சுமார் ரூ.7.77 கோடி மதிப்பீட்டில் சாலை அமைத்தல், ஒரே நேரத்தில் 34 பேருந்துகள் நிறுத்தும் வசதி ஏற்படுத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 2,000 முறை பேருந்துகள் வந்து செல்லும் நிலையில், அங்கும் தினமும் சுமார் 40,000 மக்கள் பயணம் செய்வார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, மக்களின் தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும் வகையில், அந்த இடத்திலும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த திட்டம் வடசென்னையின் வளர்ச்சியில் ஒரு பொற்காலமாக அமைவதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சிக் காலத்தில், பொன்னெழுத்துக்களால் பதிக்க வேண்டிய ஒரு பேருந்து நிலையமாக பிராட்வே பேருந்து நிலையம் அமையவுள்ளது.

மொத்தமாக சுமார் ரூ.800 கோடி மதிப்பீட்டில் "குறளகத்துடன் இணைந்த பல்நோக்கு போக்குவரத்து வசதி வளாகம்" பெருந்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.160 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.500 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பல்வேறு துறைகளிலிருந்து கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து, ரூ.800 கோடி செலவில் இந்தத் பெருந்திட்டம் வடசென்னையின் வரப்பிரசாதமாக அமையும்.

முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட நாயகர் மட்டுமல்ல; வருங்கால மக்களின் தேவைகளை உணர்ந்து திட்டங்களை வகுக்கும் திட்ட நாயகன் என்பதற்கு இந்தப் பிராட்வே புதிய பேருந்து நிலையம் ஒரு சிறந்த உதாரணமாக அமையும்.

இந்த பேருந்து நிலையப் பணிகளுக்கான துவக்க விழா, தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால், இந்த மாதம் 25ஆம் தேதிக்குள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"பணிகள் எப்படி நிறைவடையும்?" என்ற செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில் வருமாறு :-**

ஒரு சிற்பி ஒரு கல்லை கொண்டு செதுக்கத் தொடங்கினால், அந்தச் சிற்பிக்கு உயிரோட்டம் வர என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் செய்ய வேண்டும். அந்தச் சிற்பத்தின் இறுதி கட்டம் என்பது அதன் கண்களைத் திறப்பதும், நெற்றியில் பொட்டு வைப்பதும் ஆகும். அதுபோல, ஒரு சிறிய பணியையும் விடாமல், அனைத்தையும் கவனமாகச் செய்து வருகிறோம்.

இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, மக்களின் அடிப்படை தேவைகளில் எதிலும் குறைபாடு இல்லாத வகையில், அது சிறப்பாக இயங்கும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.



"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தெருமுனை பிரச்சார கூட்டம் ** திருப்போரூர் வடக்கு சார்பில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.எல் . இதயவர்மன் தலைமையில் பாகம் 53 மற்றும் 52 கொளத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றது. இதில் தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை சிறப்புரையாற்றினார். உடன் வெண்பேடு இ.ரமேஷ், ஜி.சி.அன்பு செழியன், அருண்குமார், வேதாசலம், யுவராஜ், மோகன், மகேஷ், ராஜி, அசோக், சுரேஷ், சங்கர், மதிமாறன், சுந்தர், வினோத், செல்லதுரை, ருக்மாகதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமான மகளிர் கலந்து கொண்டனர்.




சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதியில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி, வட்டச் செயலாளர்கள் – பி.எல்.ஏ.–2 ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் கோவி. லெனின் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினர். ஆகவே இக்கூட்டத்தில் மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர்கள் – பி.எல்.ஏ.–2 நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழாக் கொண்டாட்டம் !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !



திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவிப்புக்கிணங்க,

திருச்சி தெற்கு மாவட்டத்தில் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களில் விளையாட்டு போட்டிகள் கீழ்கண்ட அட்டவணைப்படி 14/01/2026 வரை நடைபெறும். கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும், www.dravidapongal.in. என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும். 14.01.2026 தேதிக்குள் அனைத்து போட்டிகளும் முடிக்க வேண்டும்.

ஜனவரி 14,15 ஆம் தேதி திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் ஊராட்சி, வார்டு, வட்டம் அளவில் மகளிர்களை திரட்டி, திராவிட பொங்கல் வைத்து கொண்டாடப்பட வேண்டும் அனைத்து வீடுகளிலும் முன்பு "சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என எழுதி திராவிட பொங்கல் கோலமிட்டு பெண்கள் குழந்தைகளுக்கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும் என அன்புடன் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வ.எண் | நாள் | பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | தலைமை | போட்டிகள் | போட்டியை துவக்கி வைப்போர் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.01.2026 | மார்க்கெட் பகுதி | RG.பாபு | கால்பந்து போட்டி | ஆர். மணிமேகலை |
| 2. | 07.01.2026 | காட்டூர் பகுதி | O.நீலமேகம் | கால்பந்து போட்டி | ஆறு. சந்திர மோகன் |
| 3. | 07.01.2026 | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | கபாடி போட்டி | என்.கோவிந்தராஜ் |
| 4. | 08.01.2026 | பாலக்கரை பகுதி | T.P.S.S.ராஜ் முஹம்மது | கால்பந்து போட்டி | எம். தமிழ்செல்வம் |
| 5. | 08.01.2026 | திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் | கால்பந்து போட்டி | கே.கே.கே. கார்த்திக் |
| 6. | 08.01.2026 | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | கபாடி போட்டி | கே. சண்முகம் |
| 7. | 09.01.2026 | கலைஞர் நகர் பகுதி | G.மணிவேல் | கால்பந்து போட்டி | பொன்.செல்லையா |
| 8. | 09.01.2026 | கூத்தைப்பார் பேரூர் | M.RT.P.K.தங்கவேல் | கிரிக்கெட் போட்டி | எஸ். பன்னீர்செல்வம் |
| 9. | 09.01.2026 | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | கிரிக்கெட் போட்டி | எம்.மாரியப்பன் |
| 10. | 10.01.2026 | அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் | கால்பந்து போட்டி | பி.ஏ. நூர்கான் |
| 11. | 10.01.2026 | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | கபாடி போட்டி | வண்ணை அரங்கநாதன் |
| 12. | 10.01.2026 | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | கபாடி போட்டி | லீலா வேலு |
| 13. | 10.01.2026 | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | கிரிக்கெட் போட்டி | இரா. மூக்கன் |
| 14. | 11.01.2026 | மாநகர கழகம் | மு.மதிவாணன் | சைக்கிள் போட்டி | அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| 15. | 11.01.2026 | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | கிரிக்கெட் போட்டி | V.தனசேகரன் |
| 16. | 11.01.2026 | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | கபாடி போட்டி | கவிஞர் சல்மா |
| 17. | 12.01.2026 | மலைக்கோட்டை பகுதி | R.மோகன் | கால்பந்து போட்டி | உ.ராஜேஸ்வரன் |
| 18. | 12.01.2026 | பொன்மலை பகுதி | E.M.தர்மராஜ் | கால்பந்து போட்டி | கே.சி.பழனிச்சாமி |
| 19. | 12.01.2026 | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | கபாடி போட்டி | இரா. குணசேகரன் |
| 20. | 13.01.2026 | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | கபாடி போட்டி | பி.எம்.சபியுல்லா |
| 21. | 14.01.2026 | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | கபாடி போட்டி | கே.என்.சேகரன் |
| 22. | 14.01.2026 | மாவட்ட கழகம் | மாவட்ட செயலாளர் | வாலிபால் | அமைச்சர் ஆர். காந்தி |

மேற்கண்ட நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்,
மாவட்ட கழக செயலாளர்,
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகரத்தில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. கௌடி தேவாலயத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம். எல். ஏ. கிறிஸ்துவ சமுதாய மக்களின் நலனுக்காக திமுக அரசு செய்துள்ள சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை நேரடியாக பொதுமக்களிடம் வழங்கி அரசியல் விழிப்புணர்வோடு இருப்போம்! தமிழ்நாட்டின் நல்லிணக்கத்தை காப்போம்!* என்று கூறினார். உடன் எஸ்.கே.ஆதாம், பொன் பாண்டியன், டி.என். ஆர்.சீனிவாசன், டி.எம்.ரவி, கு.பிரபாகரன், பாலகிருஷ்ணன், முனுசாமி, சுரேஷ், மற்றும் பலர் உள்ளனர்.